சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 42 / 2019

பெயர்: சந்துரு வா.சா.1 தேதி **10.11.2025**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது மாமனார் பெயர் வெள்ளைச்சாமி, மாமியார் பெயர் தற்போது ஞாபகமில்லை. மேற்படியார்களுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை. ஆனால் உயிருடன் உள்ளார்கள். எனது மாமியார் பெயர் மருதாயி என்றால் இல்லை. சத்தியஜோதி என் மனைவி. எனது தாயார் பெயர் சரோஜா. எனது மாமனார் மாமியாரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இவ்வழக்கில் சத்தியஜோதி இறந்ததற்காக காவல்துறையில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் எனது மாமனார், மாமியார் தான் புகார் கொடுத்தார்கள். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்பதால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முதன்முதலாக 26.08.2013 ம் தேதி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பியுள்ளேன். எந்த வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஞாபகமில்லை. மேற்படி வழக்கறிஞரிடம் நஷ்டஈடு கேட்கவேண்டும் என்கின்ற விபரத்தை நான் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர் சட்டவிளக்கங்களையெல்லாம் பார்த்து தான் வழக்கு தாக்கல் செய்யலாம் என்று சொன்னார். மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து தான் என்னை வறியவராக விளம்புகை செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவினை அவசரமாக தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்னர் அரசுக்கு உரிமையியல் நடைமுறை சட்டப்பிரிவு 80(c) ன் கீழ் அறிவிப்பு அனுப்பாததால் வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மனைவியின் சடலகூறாய்வு அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி கர்பமான நாள்முதல் தொடர்ச்சியாக மருத்துவ பரிசோதனைக்காக ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். எந்த ஊரைச்சேர்ந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தார் என்றால் காட்டுப்புத்தூர் மற்றும் இனுங்கூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று வந்தார். மேற்படி மருத்துவ சிகிச்சைக்கு செல்லுகின்ற காலகட்டத்தில் எனது மனைவிக்கு எவ்வித குறைபாடுகளும் இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பிரசவத்திற்காக எந்த மருத்துவமனையில் யார் சேர்த்தார் என்றால் எனது மாமனார் இனுங்கூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் சேர்த்தார். மேற்படி மருத்துவமனையில் சேர்த்த காலகட்டத்தில் நான் எனது மனைவியுடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனது மனைவியை 12.07.2013 அன்று காலை

9.30 மணிக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மணி நேர இடைவெளியிலும் மருத்துவர்கள் பரிசோதனை செய்தார்கள் என்றால் சரிதான். அப்பொழுதும் எனது மனைவிக்கு எவ்வித குறைபாடும் இல்லை. எனது மனைவியை அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு அனுமதித்தவர் மருத்துவர் திரு.சிவக்குமார் என்றால் இல்லை மருத்துவர் திரு. ரமேஷ் தான் அனுமதித்தார். எதன் அடிப்படையில் மேற்படி சங்கதியை நான் தெரிந்து கொண்டேன் என்றால் ரமேஷ் டாக்டர் தான் என்னிடம் சிவக்குமார் அனுமதிக்கவில்லை எனவும், ரமேஷ் மருத்துவர் தான் அனுமதித்தாகவும், அவர் நிறைய பிரசவம் பார்த்துள்ளதாலும், பிரச்சனை ஏற்படாது என்றும் சொன்னார். எத்தனை மணிக்கு அவ்வாறு என்னிடம் சொன்னார் என்றால் மதியம் 1.30 மணிக்கு சொன்னார். நான் மேலே சொன்ன மருத்துவர் ரமேஷ் என்பவர் நடமாடும் மருத்துமனையில் (Mobile Medical Unit) பணிபுரிவதாலும், அவர் அன்றையதினம் இரவு 10 மணிவரை மேற்படி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என் மனைவிக்கு மருத்துவமனையில் காலை 9.30 மணிக்கு அனுமதித்ததாக கூறக்கூடிய மருத்துவர் சிவக்குமார் பணி முடிந்து மாலை 5.30 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. இரவு 10.00 மணிக்கு எனது மனைவிக்கு பிரசவவலி ஏற்பட்டு தொப்புள்கொடி சுற்றி குழந்தை பிறந்தபோது பிரச்சனை ஏற்பட்டுவிட்டதால் உடனடியாக மேற்படி நடமாடும் மருத்துவமனையில் பணிபுரிந்து ரமேஷ் என்பவர் அழைக்கப்பட்டார் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு பிரசவத்திற்கு பின்னிட்டு குழந்தை இறந்துவிட்டது என்றும், மேற்படி குழந்தையை கையெழுத்து செய்து யார் பெற்றார் என்றால் யாருமே இறந்த குழந்தையை பெற்றுக்கொள்ளவில்லை. மேற்படி குழந்தைக்கு சடலகூறாய்வு எதுவும் செய்யவில்லை. மேற்படி இறந்துபோன குழந்தையை திருச்சி மருத்துவமனையிலும் யாரும் கையெழுத்து செய்து பெறவில்லை. எனது மனைவியின் உடலை திருச்சி அரசு மருத்துவமனையில் சடலகூறாய்வு செய்ததற்கு பின்னிட்டு யார் பெற்றுக்கொண்டார் என்றால் எனது மாமனார் தான் கையெழுத்துப்போட்டு சடலத்தை பெற்றுக்கொண்டார். இனுங்கூர் மருத்துவமனை மற்றும் திருச்சி மருத்துவமனையிலும் எங்குமே நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் இனுங்கூர் மருத்துவமனைக்கோ, திருச்சி மருத்துவமனைக்கோ வரவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவியை இனுங்கூர் மருத்துவமனையிலிருந்து திருச்சி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும்போது யார் உடன் சென்றார்கள் என்றால் மேற்படி மருத்துவமனையில் இருந்த செவிலியர்கள் மட்டும் தான் சென்றார்கள். இரத்தப்போக்குஅதிகமாக இருந்ததால் எங்கள் யாரையும் ஆம்புலன்ஸில் அனுமதிக்கவில்லை. இனுங்கூர் மருத்துவமனையிலிருந்து செல்லும்போது என் மனைவி உயிருடன் இருந்தாரா என்றால்

உயிருடன் தான் இருந்தார். மேற்படி ஆம்புலன்ஸ் ஆனது தமிழக அரசால் அமைக்கப்பட்ட 108 ஆம்புலன்ஸ் தான். ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவம் பார்க்கக்கூடாது என கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. 2005ம் ஆண்டிற்கு முன்பாக மத்திய, மாநில அரசுகளின் சுற்றறிக்கை படி ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்மை துணை செவிலியர்கள் மூலமாகத்தான் பிரசவம் பார்க்கப்பட்டது என்றால் சரியல்ல. 2005ம் ஆண்டிற்கு பின்னிட்டு தேசிய ஊரக குழுமம் என்கின்ற உத்தரவின் படி 20,000 நபர்களுக்கு கூடுதலாக இருக்கக்கூடிய கிராம பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டாயம் இருக்கவேண்டும் எனவும், அங்கு பிரசவம் பார்ப்பதற்கு நான்கு ஆண்டு படித்த செவிலியர்களைத்தான் நியமணம் செய்யவேண்டும் என உத்தரவு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிராம பகுதிகளில் ஏற்பட்ட கர்பகால இறப்புகளை சரிசெய்வதற்காகத்தான் மேற்படி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ஆகையால் ஆரம்ப சுகாதார மையங்களில் பிரசவம் பார்க்கக்கூடாது என கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியை மருத்துவமனையில் அனுமதிக்கும் முன்னர் அவருக்கு அனுமதிப்பதற்காக செய்யவேண்டிய அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அது சம்பந்தமான குறிப்புகளையும் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆரம்ப சுகாதார மையங்களில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகளை இரண்டு வகையாக பிரிப்பார்கள் என்றாலும், அதில் High Risk மற்றும் No Risk கர்ப்பிணிகள் என பிரிப்பார்கள் என்றாலும், அவ்வாறு கர்ப்பிணிகளை வகைப்பாடு செய்யும் போது High Risk உள்ள கர்ப்பிணிகளை உடனடியாக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிடுவார்கள் என்றாலும், மற்றவர்களை மட்டும் தான் பிரசவத்திற்கு அனுமதிப்பார்கள் என்றாலும் சரியல்ல. என் மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சமயத்தில் கேள்விகளை புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும், நல்ல நிலமையிலும், ஆரோக்கியமான நிலையிலும் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது மனைவிக்கு குழந்தை தொப்புள்கொடி சுற்றி பிறந்ததால் மேற்படி கர்ப்பபையானது விரிந்து சுருங்கவில்லை என்பதால் தான் இரத்தப்போக்கு ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி எனது மனைவிக்கு ஏற்பட்ட இரத்தப்போக்கு அதிகப்படியாக இருந்ததால் தான் நடமாடும் மருத்துவமனை மருத்துவரை அழைத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நடமாடும் மருத்துவமனையில் இருந்த மருத்துவர் ரமேஷ் என்பவர் வந்து பரிசோதனை செய்துவிட்டு இரத்தப்போக்கு அதிகமானதால் இரத்த அழுத்தம் குறைந்தபடியால் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றால் சரியல்ல. மேற்படி திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு முன்னர் செய்யவேண்டிய முதல் கட்ட பரிசோதனைகளை முடித்து தான் அனுப்பிவைக்கப்பட்டார் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸில் சென்ற சமயத்தில் அதிகமாக

இரத்தப்போக்கு ஏற்பட்டபடியாலும், அதனால் அவருக்கு இரத்த அழுத்தம் குறைவானபடியால் அவர் இயற்கையாகவே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. பொதுவாக கர்ப்பகாலத்தில் இலட்சத்திற்கு 45 பேர் மரணம் அடைவார்கள் என்றாலும்,அதில் 25 பேர் அதிகஇரத்தப்போக்கு காரணமாக மரணம் அடைவார்கள் என்றால் சரியல்ல. மேற்படி மரணத்தை பெரிய மருத்துவமனையாலும் தடுத்துநிறுத்த இயலாது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், உண்மையை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ளபடி நஷ்டஈடுகள் எதுவும் முதல் பிரதிவாதி தரப்பில் கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.11 11:54:49 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.